Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 3, 2024

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 03, 2024 | ஒளி: 10 கதிர்: 106 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# அரிசியின் மொத்த விலை அதிகரிப்பு



ரஞ்சித் ராஜபக்‌ஷ

அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் மொத்த விலையை மீண்டும் உயர்த்தியுள்ளனர்.

நாடு, சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியின் மொத்த விலையை அதிகரித்துள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அரிசி மொத்த வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## புலமைப்பரிசில் பரீட்சை: அமைச்சரவை அதிரடி

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மூன்று வினாக்களுக்கு இலவச புள்ளிகள் வழங்கப்படும் என உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை(02) அறிவித்துள்ளது. மேற்படி விவகாரம் தொடர்பில், அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம், சட்டமா அதிபரின் ஊடாக உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோதே, உயர்நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாளின் மூன்று வினாக்கள் சமூக ஊடகங்களில் கசியப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## புதிய பிரதம நீதியரசர் சத்தியப்பிரமாணம்

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக, உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினி பெர்னாண்டோ ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில், திங்கட்கிழமை (02) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கையின் பிரதம நீதியரசர் பதவியை வகிக்கும் இரண்டாவது பெண்ணாகவும், இலங்கையின் 48ஆவது பிரதம நீதியரசராகவும் முர்து பெர்னாண்டோ வரலாற்றில் இணைகிறார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஓய்வுபெற்றதையடுத்து வெற்றிடமான பதவிக்கு அவரது பெயர் அரசியலமைப்பு சபையினால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



‘அஸ்வெசும’ விண்ணப்பங்களை பெறுவதற்கு

## மக்கள் குவிந்தனர்

டி.சந்ரு செ.திவாகரன்

நுவரெலியா பிரதேச செயலகத்தில் வழங்கப்படும் இரண்டாம் கட்ட புதிய ‘அஸ்வெசும’ நலன்புரி நன்மைகள் விண்ணப்ப படிவங்கள் பெற்றுக்கொள்வதற்காக ஏராளமான பொதுமக்கள் ஒரே நேரத்தில் குவிந்து விட்டனர்.

தொடர்ச்சி P2

## ஐயாவின் இல்லம் அரசாங்கத்திடம்

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லம், அவர் இறந்து ஐந்து மாதங்களின் பின்னர் நீதித்துறை, அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


உத்தியோகபூர்வ இல்லத்தை கையளிப்பதற்கு அமைச்சு ஐந்துக்கும் மேற்பட்ட நினைவூட்டல்களை வழங்கியிருந்ததாக கூறப்படுகிறது.

கொழும்பு 7, மலலசேகர மாவத்தையில் உள்ள இந்த உத்தியோகபூர்வ இல்லம் சம்பந்தனுக்கு 2015ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

பின்னர், நல்லாட்சி அரசாங்கத்தின் போது, 2019 பெப்ரவரி 26ஆம் திகதி முன்னாள் அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், சம்பந்தனுக்கு இருக்கும் வரையில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லம் சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அதன் பராமரிப்பு பணிகள் அனைத்தும் கடந்த காலத்தில் அரசால் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2



இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை

## “புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக நிறுத்தக் கூடாது”

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எந்த காலத்திலும் புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக நிறுத்தக் கூடாது எனவும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்க்கும் வகையில் புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும் என மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2






கல்வி அமைச்சுக்கு முன்பாக பதற்றம்

## இருவர் காயம்; மூவர் கைது

கல்வி அமைச்சுக்கு முன்பாக திங்கட்கிழமை(02) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் குழுவினரில் 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்ப ட்டுள்ளனர்.

இதேவேளை, 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## குரங்கு பறித்த குரும்பை விழுந்ததில் நபர் மரணம்

என்.ஆராச்சி

குரங்கு பறித்த குரும்பை நபரொருவரின் கழுத்தில் விழுந்ததில், அந்தநபர் உயிரிழந்த சம்பவமொன்று புலத்கொஹுபிட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேல் நியூஸ்மீர், பிரிவு இலக்கம் 3ஐ சேர்ந்த 81 வயதான ஏ.ஜி.ஜெயசேன என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகே இருக்கும் தென்னை மரங்களில் இருந்து விழுந்துகிடந்த தேங்காய்களை கடந்த 27ஆம் திகதியன்று பொருக்கிக்கொண்டிருந்த போதே, தென்னை மரத்தில் இருந்து குரும்பை குரங்கு பிடுங்கியுள்ளது. இதன்போதே அந்த குரும்பை, அந்நபரின் கழுத்து பகுதியில் விழுந்துள்ளது.

கழுத்தில் விழுந்ததன் பின்னர் குறித்த நபர் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதற்கிடையில், அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டார்.

நோயாளி கேகாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தொடர்ச்சி P2



## தேங்காய் விலை எகிறியது

தற்போது சந்தையில் தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவி வருவதால், தேங்காய் விலை 200 ரூபாய் வரையில் உயர்ந்துள்ளது. இந்நிலையில், சந்தையில் தேங்காய்க்கு மட்டுமன்றி, அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சில்லறை அரிசி விற்பனைக்காக அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையை விட அரிசியின் மொத்த விலை அதிகரித்துள்ளதாக ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



## மரணத்தை கணிக்கும் “மரணக் கடிகாரம்”

செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் ‘டெத் க்ளாக்’ ‘Death Application’ என்ற அப்ளிகேஷனைப் பற்றி தற்போது பலரும் பேசி வருகின்றனர், இது ஒருவரின் தினசரி வழக்கத்தை வைத்து அவர் இறந்த திகதியைக் கணிக்க முடியும்.

செயற்கை நுண்ணறிவால் இயங்கும் ‘Death Application’ செயலி கடந்த ஜூலை மாதம் வெளியிடப்பட்டு 125,000க்கும் அதிகமான பயனர்கள் பதிவிறக்கம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தத் திட்டம் ஆரோக்கியத்தில் ஆர்வமுள்ளவர்கள் மட்டுமின்றி, பொருளாதார நிபுணர்கள் மற்றும் நிதித் திட்டமிடுபவர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளதாகக் கூறப்படுகிறது. ‘மரணக் கடிகாரம்’ செயற்கை நுண்ணறிவின் சக்தியைக் கொண்டு மிகவும் துல்லியமான கணிப்புகளைச் செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

‘மரணக் கடிகாரம்’ என்பது ‘பெரும்பாலான நாட்கள்’ உருவாக்கியவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ப்ரெண்ட் ஃபிரான்சனின் சிந்தனையில் உருவானது. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் ‘மரணக் கடிகாரம்’ சுமார் 53 மில்லியன் பங்கேற்பாளர்களுடன் 1,200 க்கும் மேற்பட்ட ஆயுட்காலம் ஆய்வுகளின் தரவுத் தொகுப்பில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது .

இது ஒரு நபரின் உணவு, உடற்பயிற்சி, மன அழுத்த நிலைகள் மற்றும் தூக்கம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைப் பயன்படுத்தி மரணத்தின் சாத்தியக்கூறு திகதியைக் கணிக்கின்றது. இருப்பினும், ‘மரணக் கடிகாரம்’ செயற்கை நுண்ணறிவு எப்போதும் சரியானது அல்ல என்று பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



PAGE 1 தொடர்ச்சிகள்

# அரிசியின் மொத்த விலை அதிகரிப்பு

அதன்படி, ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசியின் மொத்த விலை 255 ரூபாயாகவும், சம்பா அரிசி 260 ரூபாயாகவும், கீரி சம்பா 275 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்த விலைக்குத் தேவையான அரிசியின் அளவுக்கான கட்டணத்தை வங்கியில் செலுத்துமாறு அரிசி ஆலை உரிமையாளர்கள் வியாபாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சந்தையில் நாட்டு அரிசியின் கட்டுப்பாட்டு விலை ரூ.220, சம்பா ரூ.230, கீரி சம்பா ரூ.260, அந்த விலைக்கு விற்பனை செய்ய நுகர்வோர் சேவை அதிகார சபை சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அரிசி ஆலை உரிமையாளர்கள்? அரிசியின் விலையை அவ்வப்போது அதிகரிப்பதால் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியாமல் தவிப்பதாக அரிசி மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் அரிசி ஆலை உரிமையாளர்கள் நாடு அரிசியை ரூ.235-240, சம்பா ரூ.250, கீரி சம்பா ரூ.260-265 என மொத்த விலையில் வியாபாரிகளுக்கு வழங்கியுள்ளனர்.



# புலமைப்பரிசில் பரீட்சை: அமைச்சரவை அதிரடி

இது தொடர்பில் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில், இந்த மனுக்கள் திங்கட்கிழமை (02) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு எதிர்வரும் 11ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை முழு நீதியரசர்கள் குழு முன்னிலையில் பரிசீலிக்குமாறும் சட்டமா அதிபர் கோரியுள்ளார்.



# புதிய பிரதம நீதியரசர் சத்தியப்பிரமாணம்

1985ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர் 1997ஆம் ஆண்டு பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும் 2014ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரசதரப்புச் சட்டத்தரணியாக இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாக அங்கு பணியாற்றியுள்ள முர்து பெர்னாண்டோ, 2018 மார்ச் மாதம் உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

முர்து பெர்னாண்டோ சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக கடமையாற்றியதுடன், உயர் நீதிமன்றத்தின் தற்போது பணியாற்றும் சிரேஷ்ட நீதிபதி இவராவார்.

**“ மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவியான முர்து பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் சட்டத்துறை இளமானிப் பட்டம் பெற்றுள்ளார்**

மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவியான முர்து பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் சட்டத்துறை இளமானிப் பட்டம் பெற்றுள்ளார்.



# மக்கள் குவிந்தனர்

சனி மற்றும் ஞாயிறு தினங்கள் விடுமுறை என்பதால் திங்கட்கிழமை (02) நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக அஸ்வெசும நலன்புரி நன்மைகள் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பிரதேச மக்கள் இவ்வாறு ஒரே நேரத்தில் கூடியுள்ளனர்.

எனினும், குறித்த அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கும் நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை எனவும் மக்களை நெறிப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் யாரும் செயற்படவில்லை எனவும், குறித்த நலன்புரி நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்குச் சரியான நடைமுறை பின்பற்றப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களில் நிலவிய வானிலை சீற்றத்தினால் பெய்த கடும் மழை காரணமாகக் கடந்த வாரங்கள் பொது மக்கள் வருகை சற்று குறைவாக இருந்தது தற்போது சீரான காலநிலை நிலவி வருவதனால் பலரும் வருகை தந்ததன் காரணமாக இவ்வாறு நெரிசல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

# “புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக நிறுத்தக் கூடாது”

திய அரசியல் சாசனத்தில் 13ஆவது திருத்தச் சட்டம் இல்லாது ஒழிக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதன் நோக்கம் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை மீறுகின்ற ஒரு செயல்பாடாக அமையும். ஓர் அரசியல் சாசனம் வருகிற போது, தமிழ் தரப்பையும், ஆலோசனையும் பெற்று அதன் பின்னர் அரசியல் சாசனம் எழுதப்பட வேண்டும்.

எங்களுக்கு இனப் பிரச்சினை இருக்கிறது. அதற்குத் தீர்வு தருகின்ற வகையில் புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக, மாகாண சபை தேர்தல் நடைபெறும் என அறிவித்துள்ள நிலையில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர், 13ஆவது திருத்தச் சட்டம் இல்லாது ஒழிக்கும் நிலை இருக்கிறது என்பதை தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் உள்ள ஒப்பந்தத்தை மீறுகின்ற வகையில் இந்தியாவை ஓரங்கட்டுகின்ற வகையில் அல்லது இந்தியாவின் ஒப்பந்தத்தை இல்லாது செய்கிற நிலை இருக்கிறதா? என்பதை ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்ளுகின்றேன். எனவே, அரசியல் சாசனம் எழுதப்படுகின்ற போது தமிழ் தரப்புக்களையும், தமிழ் தரப்புக்களின் ஆலோசனைகளையும் பெற்று புதிய அரசியல் சாசனம் எழுதப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது. 13ஆவது திருத்தச் சட்டத்தை அதாவது இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை எந்த காலத்திலும் புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக நிறுத்தக் கூடாது.

அதனை நிறைவேற்ற வேண்டும். இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பது இலங்கை இந்தியாவிற்கும் இடையில் அழிக்க முடியாத ஒப்பந்தமாகக் காணப்படுகின்றது. எனவே, புதிய அரசியல் சாசனத்தை எழுதி அதை இல்லாது ஒழிக்கும் சூழலை தற்போதைய புதிய அரசாங்கம் , ஜனாதிபதி செய்யக் கூடாது.

பாரிய அளவிலான மக்கள் அவரை நம்பி வாக்களித்து உள்ளனர். தமிழ் மக்களும் அதிக அளவில் வாக்களித்துள்ளனர். எனவே, தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும்.அதே போல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் 13ஆவது திருத்தச் சட்டமும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை புதிய அரசாங்கமும் ஜனாதிபதியும் செயல்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது.

மேலும் மன்னார் மாவட்ட மக்கள் அதிக அளவில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகாரிகள் சிறந்த முறையில் பணிகளைச் செய்துள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். மேலும் விவசாய செய்கையும் பாரிய அளவில் அழிவடைந்துள்ளன. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். மேலும் குறித்த மழை வெள்ளத்தினால் அரச உத்தியோகத்தர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களைப் புறம் தள்ளாது மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை போன்று பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.




# இருவர் காயம்; மூவர் கைது

ஆசிரியர் சேவையில் தம்மை நிரந்தரமாக இணைத்துக்கொள்ளுமாறு கோரி பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதனால், அந்த பகுதியில், பல மணிநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

# குரங்கு பறித்த குரும்பை விழுந்ததில் நபர் மரணம்

அங்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 29ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புலத்கொஹுபிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

# ஐயாவின் இல்லம் அரசாங்கத்திடம்

குறித்த உத்தியோகபூர்வ இல்லம் டிசெம்பர் 12ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என சம்பந்தனின் மகள் எழுத்து மூலம் அமைச்சுக்கு அறிவித்திருந்த போதிலும் அன்றைய தினம் அது கையளிக்கப்படவில்லை.

# வட்ஸ்அப் பயனர்களுக்கு முக்கிய அறிவித்தல்

வட்ஸ்அப் கணக்குகளை ஊடுருவி மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதால், மூன்றாம் தரப்பினருக்கு அவர்களின் அலைபேசி இலக்கங்களில் பெறப்பட்ட சரிபார்ப்புக் குறியீட்டை வழங்க வேண்டாம் என இலங்கை கணினி அவசர பதில் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஹேக்கர்கள் WhatsApp குழுக்களில் இணைந்து பயனர்களின் கணக்குகளை கண்காணிப்பதாகவும் கணக்குகளை ஹேக் செய்த பின்னர், அவர்கள் கடன் கேட்டு ஹேக் செய்யப்பட அலைபேசியில் உள்ள எண்களுக்கு அவசர செய்திகளை அனுப்புவதாகவும் இலங்கை கணினி அவசர பதில் மன்றத்தின் மூத்த தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

அதன்படி, சமய நிகழ்ச்சிகள், பரிசுகளை வெல்வது அல்லது கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்ற வாய்ப்புகளை குறிப்பிட்டு அலைபேசி எண்ணில் பெறப்பட்ட ரகசிய குறியீட்டை அவர்கள் கோருவதாக கூறப்படுகிறது.

தங்கள் வாட்ஸ்அப் கணக்கை ஹேக்கர்களிடம் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு இலகுவில் தங்கள் கணக்கிலும் உட்செல்ல முடியும் எனவும் கூறப்படுகின்றது.

**“ மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வாறான நிதி மோசடிகளை இலங்கையிலிருந்து இல்லாதொழிக்க முடியும்**

பின்னர் ஹேக்கர்கள் வாட்ஸ்அப் கணக்கை கட்டுப்படுத்தி, அந்த கணக்கில் இணைக்கப்பட்டுள்ள அலைபேசி எண்களுக்கு பல்வேறு பிரச்சினைகளை கூறி அவசரமாக பணம் அனுப்புமாறு உரிய நபர் கோருவது போலவே மெசேஜ் அனுப்புகிறார்கள்.

ஆனால், அப்படி ஒரு செய்தி வந்தால், முதலில் அந்தக் கணக்கின் உரிமையாளரைத் தொடர்பு கொண்டு, அந்தத் தகவல் உண்மையா என்பதை உறுதி செய்து, வாட்ஸ்அப் கணக்கு ஹேக் செய்யப்பட்டதாகத் தெரிந்தால், அந்தக் கணக்கை வைத்திருப்பவர் உடனடியாக அவருடன் தொடர்புடைய ஏனையவர்களுக்கு அதைப் பற்றி தெரிவிக்கவும்.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வாறான நிதி மோசடிகளை இலங்கையிலிருந்து இல்லாதொழிக்க முடியும் என பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

# “எனக்கு VIP கதிரை வேண்டாம்”



அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வருகின்றார்கள் என்பதற்காக, இதற்குப் பிறகு எந்தக் கூட்டத்துக்கும் தேவையில்லாத செலவு செய்யாதீர்கள். எனது அனைத்து நிகழ்வுகளின் செலவைக் குறைப்பது குறித்து நிறுவனங்களுக்குத் தெரிவிக்கத் தயாராகி வருகிறேன். VIP (விசேட பிரமுகர்கள்) அமர்வதற்காகக் கதிரைகளை எனக்குக் கொண்டு வர வேண்டாம். நாங்கள் சாதாரண பிளாஸ்டிக் கதிரைகளில் அமர்ந்தவர்கள். அந்த கதிரைகள் போதும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

புத்தளம் மாவட்ட இலக்கிய விழாவிற்காக ஆனமடுவ சுதம்பாய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அமைச்சர், இந்த ஆனமடுவை எமக்கு அறிமுகமில்லாத பிரதேசம் அல்ல. எனவே, அந்தச் சூழலினால் எவ்வளவோ உயரிய பதவிகளுக்குச் சென்றாலும் மரங்களும் பசுமையான ஏரிகளும் கொண்ட அழகிய இடம் இது, நாம் இருந்த கடந்த காலத்தை மறக்க முடியாது. எனவே, எந்த நிகழ்ச்சிக்கும் தேவையில்லாத செலவு செய்து பணத்தை வீணாக்க விரும்பவில்லை.

இந்த இலக்கிய நிகழ்வில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ரெக்ஸ் ஹறிசன், விலாமசேன நம்முனி, பத்ம குமாரி, பெர்னாண்டோ புள்ளே ஆகிய நான்கு ஊடகவியலாளர்கள் உட்பட பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிப்படுத்திய 11 பேருக்கு காலதினி விருது வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த அரச இலக்கிய விழா வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய தலைமையில் புத்தளம் மாவட்டச் செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் உட்பட புத்தளம் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.













## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

கடந்த சில நாட்களாக நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல அமைப்புகள் மற்றும் தரப்பினரால் உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

– தமிழ்மிரர் நிருபர்கள்









## பிறப்பு - இறப்பு பதிவாளர் விபத்தில் மரணம்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில் பிறப்பு - இறப்பு பதிவாளரான தாவடி கிழக்கைச் சேர்ந்த வயதுடைய அன்னலிங்கம் செந்தில் குமரேசன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் பகுதியில் இருந்து தாவடி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது எதிரே வந்த கார் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த குறித்த நபரை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## “எந்த சூழ்நிலையிலும் இ.தொ.கா. கைவிடாது”



கடந்த சில நாட்களாக நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அந்த வகையில் நுவரெலியா மாவட்டத்திலும் மக்கள் அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன், அவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களையும் வழங்கி வைத்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான சமர்வில், எஸ்கடேல், ஹைபொரஸ்ட்-அல்மா ஆகிய பகுதி மக்களுக்கான நிவாரன பொதிகள் ஞாயிற்றுக்கிழமை(01) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிப்புக்குள்ளான மக்களுக்கான தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டதோடு, தொடர்ந்தும் மக்களுக்கான சேவைகள் தடைப்படாது இடம்பெறும் என்றும் தெரிவித்தார். அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், எந்தவொரு சூழ்நிலையிலும் மக்களைக் கைவிடாது என்றும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## விவசாயி படுகொலை; இளைஞன் கைது

வவுனியா, ஓமந்தை, பரசன்குளம் பிரதேசத்தில் விவசாயி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் திங்கட்கிழமை (02) கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா-சேமமடு பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய அய்யம்பிள்ளை செல்வ நிரோஜன் என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கெப் வண்டியில் கும்பலொன்றுடன் வந்த சந்தேக நபர் வீட்டிலிருந்த விவசாயியை வாளால் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

உயிரிழந்தவரும் சந்தேகநபரும் இணைந்து மாடுகளை வளர்த்து வந்ததாகவும், அதன் உரிமை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் வவுனியா கூமாங்குளத்தை சேர்ந்த 18 வயதுடையவர் எனவும் அவர் வவுனியா நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்தப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விண்ணப்பம் கோரல்

எஸ்.தில்லைநாதன்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2025ஆம் ஆண்டுக்கான இளம் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

இளம் சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தி அல்லது சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அனுட்டித்து வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது இளம் சைவப்புலவர் தெரிவு அல்லது சித்தாந்த பண்டிதர் தெரிவு அல்லது பண்டிதர் தெரிவு பரீட்சையில் (ஆரிய திராவிடபாசா விருத்திச்சங்கம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்தை இணையத்தில் பெற்று பரீட்சை கட்டணமாக 1,200 ரூபாயை இலங்கை வங்கியில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கணக்கு இலக்கம் 1133272 இற்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை எதிர்வரும் 30.12.2024 இற்கு முன்பாக சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைவர் அகில இலங்கை சைவப்புலவர் மாசேரி வரணி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

வங்கிப்பற்றுச்சீட்டு விண்ணப்படிவத்துடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக் கட்டணம் 300 ரூபாயுடன் 15.01.2025 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதற்குப் பிந்திய விண்ணப்பங்கள் ஏதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விடயங்களை 777 197067, 077 9773538, 077 6132176 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பரீட்சைகள் 2025ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெறும் என அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## ஆடை வடிவமைப்பு பேஷன் ஷோ





கைவிடப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஆடை வடிவமைப்பு ‘பேஷன் ஷோ’ நிகழ்வொன்று ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்களால், ஊவா அபிமானி கைத்தொழில் மற்றும் வர்த்தக கண்காட்சியுடன் இணைந்து பதுளை சேனாநாயக்க மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை(29) இடம்பெற்றது.

இதில், ஊவா மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் நிஹால் குணரத்ன, கைத்தொழில் பணிப்பாளர் சம்பத் நிஷங்க, சுற்றுலா பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க, பேராசிரியர் வாசனா மைத்திரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விவசாயத்துறைக்கு புத்துயிர் அளிக்க முன்வரவேண்டும்

சில பொருளாதார நிபுணர்களின் அளவுகோல்களின்படி, மழையே மூலதனம். விவசாயம் மற்றும் நீர் மின்சாரத்திற்கு மழை தேவை. அதன்படி, மழை பெய்யாவிட்டால், உணவு கிடைக்காது, நீர் மின்சாரம் இல்லை. ஆனால், இந்த முறை அது மறுபக்கம். சுமார் பதினைந்து நாட்களாகப் பெய்த தொடர் மழை காரணமாக இந்நாட்டில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் உள்ளிட்ட பயிர்கள் பாலைவனமாகின. மழையே மூலதனம். எனினும், நாம் மூலதனத்தால் கொல்லப்பட்டோம்.

மழையால் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.40,000 வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த இழப்பீடு போதாது என்று குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். இந்த குற்றச்சாட்டுகளை முன்வைப்போர், அரசாங்கத்தின் எதிரி என்று அர்த்தமல்ல. பிரச்சனையின் நடைமுறைத் தன்மையை வெளிக்கொண்டு வந்துள்ளார்.

நாட்டில் இன்னும் அரிசி தட்டுப்பாடு உள்ளது. கனமழையால் பயிர்கள் நஷ்டமடைந்ததால் நிரந்தரமாக அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அப்போது அரசு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும். இப்போதும் நம் நாட்டில் பணம் இல்லை. இந்த பிச்சை இன்று நேற்றல்ல, பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது.

நமது வயிற்றின் பெரும்பகுதி பெரும்போகம் மற்றும் சிறுபோகம் பருவங்களில், வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று ஆகியவற்றால் நிரம்பியுள்ளது. இவை இரண்டும் தரும் மழையே இலங்கையின் விவசாயத்துக்கு போதுமானது. இதற்கிடையில், இடைப்பட்ட பருவமழை தீவிரமடைந்தால், அதிக மழை பெய்யும் மற்றும் பகுதி வெள்ளம் ஏற்படும்.

சுற்றுச்சூழலுடன் நாம் மோத முடியாது. எனவே, நம் உயிரைக் காப்பாற்ற, நம் நாடு சோறு உண்ண வேண்டும். இலங்கையின் சனத்தொகையில் 27.1 சதவீதமானோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 7.4 சதவீதம் விவசாயத்தால் உற்பத்தி செய்யப்படுகிறது. மூவாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டில் நெல் பயிரிடப்படுகிறது.

நம் நாட்டில் தேயிலை மற்றும் ரப்பர் பயிர்ச்செய்கை சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்குகிறது. இலங்கையில் 21 மில்லியன் மக்கள் அரிசியை உண்கின்றனர். இந்த நாட்டில் இரண்டு மில்லியன் விவசாயிகள் உள்ளனர். நாட்டின் தொழிலாளர்களில் 30 சதவீதமானோர் நேரடியாக நெல்வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

1998இல் இலங்கை 3 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசியை உற்பத்தி செய்தது. அந்த ஆண்டில் தனிநபர் அரிசி நுகர்வு 92 கிலோ கிராமாக இருந்தது. நாட்டுக்குத் தேவையான முழுத் தொகையையும் எங்களால் உற்பத்தி செய்ய முடியாது. ஆண்டுக்குத் தேவையான அரிசியில் 60 சதவீதம் மட்டுமே உற்பத்தி செய்கிறோம். மீதியை இந்தியா தலைமையிலான ஆசிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும்.

இதற்கிடையில், ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் போன்ற மற்றொரு மோசமான நிலைமை அதிகரித்து வருகிறது. அதுவே மக்கள் விவசாயத்தில் இருந்து விலகுகின்றனர். பொதுவாக வயல் வேலையை விட தினசரி கூலி, மேசன் வேலை அதிக லாபம் தரும். மேலும் விவசாயிகள் நெல் விவசாயத்தை விட்டு வெளியேறும் போது, அவர்களின் இடத்திற்கு புதிய ஆட்கள் வருவதில்லை. சேற்றில் இறங்குவது யாருக்கும் பிடிக்காது. நெல் விவசாயம் இப்படி ஆபத்தை எதிர்நோக்கும் நேரத்தில் மழை என்ற மூலதனம் பூமியில் விழுந்து பணியை மேலும் பாதித்துள்ளது. ஆகையால், இலங்கையின் விவசாயத்துறைக்கு புத்துயிர் அளிக்க புதிய அரசாங்கம் செயற்பட வேண்டும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தனி மனித ஒழுக்கம் அற்றவன், நேர்மைக்குப் புறம்பானவன் ஆவான். ஆனால், இவர்களே நடிப்புடன் கூடிய வாழ்வில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் நேர்மை மிகு அரசியல்வாதிகள், தங்கள் நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்தனர். அவர்கள் மூலம் கிடைத்த அனுகூலத்தை, நேர்மையற்றவர்கள் ஆட்சிக்கு வந்தமையால், நாட்டில் பிரச்சினைகள் வானை முட்டிவிட்டன.

வியாபாரத்தில் மோசடி, கல்வியை வியாபாரமாக்குதல், மருத்துவத்தில் சுரண்டல், போதையை நாடுதல், நாகரிகத்தின் பேரால் நடக்கும் சீர்கேடுகள், எல்லாமே ஒழுக்கம் சார்ந்தனவற்றுக்கு எதிரான இழிச் செயல்களில் சில உதாரணங்கள் ஆகும்.

ஆனால், இந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள், தங்களை ஒழுக்கம் மிகு மாந்தர்களாகவே காட்டுவதும் உண்டு. இவர்களின் வருமானங்களைப் பார்த்து, சாதாரணமான மக்களும் மனப் புரள்வில் சிக்குவதுண்டு.

நிலையான நல்வாழ்வில் தோல்வியில்லை, அமைதி மட்டுமே உண்டு என்பதை உணர்க.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## முஸ்லிம் கட்சிகள்

# வீழ்ச்சியை மீள்வாசிப்பு செய்யுமா?

மொஹமட் பாதுஷா

பாராளுமன்ற பொதுத் தேர்தல் ஒரு தரப்பிற்கு அபரிமிதமான வெற்றியைக் கொடுத்திருப்பது மட்டுமன்றி, இன்னும் பல செய்திகளையும் சொல்லி நிற்கின்றது. எதிர்க்கட்சிகளின் பலவீனம், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் கட்சிகளின் மீதான மக்களின் வெறுப்பு என விடயங்களை உணர்த்தி நிற்கின்றது என்பதைக் கவனிக்க வேண்டும்.

குறிப்பாக இந்தத் தேர்தலில் தமிழ் கட்சிகளைப் போலவே முஸ்லிம் கட்சிகளும் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

இதற்கு வெறுமனே அனுர அலை அல்லது என்.பி.பி. அலையே காரணம் எனக் கூறி விட முடியாது. அந்த அலையில் முஸ்லிம் மக்கள் அள்ளுண்டு போவதற்குப் பின்னால் முஸ்லிம் கட்சிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளின் செயற்பாடுகளும் காரணமாக இருந்திருக்கின்றன.

கடந்த காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற முஸ்லிம் கட்சிகளின் அரசியலில் மக்களுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக மாற்றுத் தெரிவு ஒன்றுக்காக மக்கள் ஏங்கிக் கொண்டிருந்த போது அவர்களுக்கு என்.பி.பி. கண்முன்னே தெரிந்துள்ளது. அவ்வளவுதான். வடக்கு, கிழக்கில் நிலைமை இப்படியென்றால் அதற்கு வெளியிலும் வழக்கம்போல பெருந்தேசியக் கட்சிகளில் போட்டியிட்ட பல முஸ்லிம் வேட்பாளர்கள் இந்த தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்படுவதற்கு அவர்களது கடந்தகால அரசியலும் ஒரு காரணம் என கூறலாம்.

மாறாக, வடக்கு, கிழக்கிலோ ஏனைய பாகங்களிலோ வெற்றியிட்டிய புதுமுகங்கள் குறிப்பாக என்.பி.பி. எம்.பி.க்களுக்கு மக்கள் வாக்களித்தது வெற்றிபெறச் செய்தது ‘அவர்கள் செய்து காட்டுவார்கள்’ என்ற கடந்தகால ஆதாரங்களை, வரலாற்றுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அனுரகுமார திசாநாயக்க என்ற நம்பிக்கை தரும் ஜனாதிபதியின் கட்சியில் போட்டியிடுவதாலும், ஏற்கெனவே

முஸ்லிம் கட்சிகளிலும் ஐ.தே.க., பொதுஜன பெரமுண, ஐக்கிய மக்கள் சக்தியில் எம்.பியாக இருந்த முஸ்லிம்களுக்கு வழங்கிய வாய்ப்பை இவர்களுக்கும் ஒரு தடவை வழங்கிப் பார்த்தால் என்ன என்ற எண்ணத்தினாலுமே, வழக்கமான ஆட்களையும் கட்சிகளையும் புறக்கணித்து புதுமுகங்களுக்கு வாக்களித்திருக்கின்றார்கள்.

எனவே, இங்கு முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் சமூகமும் ஒரு விடயத்தை தெளிவாக கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

அதாவது, என்.பி.பி. அரசாங்கம் முஸ்லிம்கள் விடயத்தில் சரியாக நடந்து கொள்ளுமா என்ற கேள்வி, ஏற்கெனவே அமைச்சரவை நியமனத்தின் போதே எழத் தொடங்கிவிட்டது. என்.பி.பி. உள்ளிட்ட பெருந்தேசியக் கட்சிகளில் உள்ள முஸ்லிம் எம்.பிக்கள் முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளுக்காக குரல் கொடுப்பார்களா என்பதும் நிச்சயமில்லை.

கடந்த காலங்களில் முஸ்லிம் கட்சிகளின் சார்பாக பெரும்பான்மைக் கட்சிகளில் போட்டியிட்டு எம்.பியாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மட்டுமன்றி, பெருந்தேசியக் கட்சி ஒன்றுக்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்களே அந்தக் கட்சிக்கு முட்டுக் கொடுக்கின்ற வேலையையும், அரசியல் முகவர் வேலைகளையுமே செய்தனர்.

இப்படியிருக்கையில், தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பெரும்பான்மைக் கட்சிகளின் ஊடாக புதிதாக பாராளுமன்றத்திற்கு வந்துள்ள எம்.பிக்கள், தங்களது கட்சியின் கட்டுக்கோப்பு, கொள்கை, கோட்பாடுகளை உடைத்துக் கொண்டு வெளியே வந்து தமது சமூகத்திற்காக குரல்கொடுப்பது எந்தளவுக்குச் சாத்தியம் என்பது நியாயமான யோசனைதான்.

இந்த இடத்தில்தான் முஸ்லிம்களுக்கான பிரத்தியேக அரசியல் அணிகளின் தேவைப்பாடு எழுகின்றது. கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரோ அல்லது ஏனைய முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களோ அன்றேல், அதன் எம்.பிக்களோ முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்காக சுயநலன் மறந்து குரல் கொடுத்தார்கள் என்று

திருப்திப்படவே முடியாது. சமூகம் அடைந்த நன்மைகளை விட அவர்கள் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களும் இலாபங்களும்தான் ஒப்பீட்டளவில் அதிகம் என்பது சமூகத்திற்கு நன்றாகவே தெரியும். அதுதான் இந்த வெறுப்புக்கு முதன்மைக் காரணம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் தங்களது அபிலாஷைகள்,

நிலைப்பாடுகளை கொஞ்சமேனும் முன்வைப்பதற்கான ஒரு வழிமுறையாக முஸ்லிம் கட்சிகள் இருந்திருக்கின்றன. ஒரு

பாதுகாப்பு அரணாக, அவசரத்திற்கு உதவும் ஒரு உயிர்காப்பு படகுபோல இதனைக் குறிப்பிடலாம்.

முஸ்லிம்கள் சுதந்திரத்திற்கு முன் பின்னான காலங்களில் பிரதான பெருந்தேசியக் கட்சிகளுடனேயே பயணித்தனர். வடக்கு, கிழக்கில் ஒருசில முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ்க் கட்சிகளுடனும் அரசியல் செய்தனர். ஆனால், ஒரு கட்டத்தில் அதுவெல்லாம் சரிப்பட்டு வராது என்ற எண்ணத்திலேயே தனிக் கட்சியை ஆரம்பிக்கும் நிலைக்கு முஸ்லிம் சமூகம் தள்ளப்பட்டது.

அந்த வகையில், முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலை மக்கள்மயப்படுத்திய மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் முயற்சிகள் இவ்விடத்தில் நினைவு கொள்ளப்பட வேண்டியவை. அந்த கொள்கைகளை ஊக்குவித்ததற்காகப் புலிகளாலும் ஏனைய ஆயுதக் குழுக்களாலும் கொல்லப்பட்ட மாகாண சபை உறுப்பினர் அலிஉதுமான் போன்றோரின் தியாகங்கள் இதற்குப் பின்னால் உள்ளன. அதேபோல், முஸ்லிம் தேசியம், முஸ்லிம் சுயநிர்ணயம், முஸ்லிம்களுக்கான அலகு, இனப் பிரச்சினையில் முஸ்லிம்களுக்கு உரிய பங்கு எனப் பல விடயங்களுக்காகக் குரல் கொடுத்து வந்த நிலையில் கடந்தவாரம் மரணித்த, இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் மு.காவின் ஸ்தாபக தவிசாளருமான எம்.எச்.சேகு இஸ்ஸதீனின் கருத்தியல்களை இப்போது உன்னிப்பாக நோக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

ஏனென்றால், முஸ்லிம் கட்சிகளைப் புறக்கணித்து அல்லது அந்த வேட்பாளர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகளைக் குறைத்து, என்.பி.பி. போன்ற பெரும்பான்மைக் கட்சிகளுக்கு வாக்களித்த மக்களுக்குச் சரியான பிரதிபலன்கிடைக்கவில்லை என்றால், மீண்டும் முஸ்லிம் அரசியலை நோக்கியே ஓடி வர வேண்டும். ‘அஷ்ரப், சேகு இஸ்ஸதீன் காலத்தில்’ இருந்து மீள ஆரம்பிக்க நேரிடலாம் என்பதை மறந்து விடக் கூடாது.

அரசியல் என்பது எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. 3 ஆசனங்களை வைத்திருந்த கட்சி நாட்டைக் கைப்பற்றுவதும், 69 இலட்சம் பெற்றவர்கள் வீட்டேபடு முடங்குவதும் நமது கண்முன்னே நிகழ்ந்திருக்கின்றது.

இந்த தேர்தலில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் முஸ்லிம் கட்சிகளுக்கு குறைந்தவளவான வாக்குகளை அளித்துள்ளனர். ஆனால், முஸ்லிம் அணிகளையோ அவற்றின் வேட்பாளர்களையோ முற்றாக புறக்கணிக்கவில்லை என்ற விடயத்தை நன்றாக கவனிக்க வேண்டும். இந்த தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்ற மூன்று முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் தமது கட்சியில் போட்டியிடவில்லை. ஹக்கீமும் றிசாட்டும் ஐக்கிய மக்கள் சக்தியிலும் அதாவுல்லா புதிய ஜனநாயக முன்னணியிலும் போட்டியிட்டனர். இரு தலைவர்கள் வெற்றிபெற அதாவுல்லா தோல்வியடைந்தார்.

இரு பிரதான முஸ்லிம் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸின் வாக்கு வங்கிகள் சரிந்துள்ளன.

அம்பாறை மாவட்ட பெறுபேறுகளை இதற்காகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம். ஒட்டுமொத்தமாக, நேரடியாக

இவ்விரு கட்சிகளும் தலா ஒரு ஆசனத்தையே பெற்றுள்ளன.

ஐ.ம.சக்தியின் தேசியப் பட்டியல் வழங்கப்படாத விடத்து, மு.காவின் மொத்த ஆசனங்கள் 4 ஆகவும் ம.காவின் ஆசனங்கள் 2 ஆகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன தேசிய காங்கிரஸிற்கோ ஏனைய சிறு முஸ்லிம் கட்சிகளுக்கோ ஆசனங்கள் இல்லை. இது முஸ்லிம் கட்சிகளுக்கு வீழ்ச்சி என்பது ஒருபுறமிருக்க நீண்டகாலத்தில் இது முஸ்லிம் அரசியலுக்கும் பெரும் பின்னடைவைக் கொண்டு வரும் என்பதை அக்கட்சிக் காரர்களும் முஸ்லிம் சமூகமும் சிந்திக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம் கட்சிகள் வீழ்ச்சியடைந்தமைக்கு முஸ்லிம் கட்சித் தலைவர்கள் கடந்தகாலத்தில் எடுத்த நிலைப்பாடுகள், முஸ்லிம் எம்.பிக்களின் சமூகத்திற்கு உதவாத அரசியல், மக்களை மதியாத தன்மை, அதிகாரத் தோரணை, எம்.பிக்களை சுற்றியிருந்த ஆட்களின் உதவாக்கரையான பண்புகள் என பல காரணங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

எனவே, இவற்றையெல்லாம் காங்கிரஸ்கள் மீள் வாசிப்புச் செய்ய வேண்டியது காலத்தின் மிக முக்கிய தேவையாகும். அப்படி தம்மை முஸ்லிம் கட்சிகள், தலைவர்கள் சரிப்படுத்திக் கொண்டால் இன்னும் சில காலத்திலாவது முஸ்லிம்களுக்கான பிரத்தியேக அரசியல் மீண்டெழுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

80களில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கையறு நிலை எதிர்காலத்தில் ஏற்பட்டாலும் அதற்கு முஸ்லிம்கள் ஒரு சமூகமாகத் தயாராக இருக்க வேண்டும். ஆகவேதான், பிரத்தியேகமான அடையாள அரசியலை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

என்.பி.பி., எஸ்.ஜே.பி. போன்ற கட்சிகளுடன் இலங்கையர் என்ற அடையாளத்துடன் இணைந்து பயணிப்பது வேறு விடயம். முஸ்லிம் அரசியலை தக்கவைப்பது என்பது வேறுவிடயம். இனநல்லிணக்கத்தையும், தனித்துவத்தையும் போட்டு குழப்பிக் கொள்ளத் தேவையில்லை.

## கடிதங்கள்

# நகரத்துக்குள் பேருந்துகள் வர வேண்டும்



முல்லைத்தீவு நகரத்திற்குள் பல பேருந்துகள் வருகை தருவதில்லை என பொது அமைப்புகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

2010இன் பின்னர் புதிய பேருந்து நிலையம் மாவட்டச் செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு மாவட்டச் செயலாளரை சந்தித்து புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பணியினை தொடங்குகின்ற அனைத்து பேருந்துகளும் முல்லைத்தீவு நகரத்திற்குள் குறிப்பாக பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் வருகை தந்து, 5 நிமிடங்கள் கழித்து தமது பணியினை தொடங்குமாறு கோரிக்கை விடுத்தியிருந்தனர்.


மாவட்டச் செயலாளரும் வழங்கிய உத்தரவின் பேரில் ஒரு மாதம் அளவில் அனைத்து பேருந்துகளும் நகரத்துக்குள் சென்று திரும்பின. தற்போது கொக்குளாய் பயணிக்கும் பேருந்து மட்டுமே நகரத்திற்குள் சென்று திரும்புவதாகவும் ஏனைய பேருந்துகள் நகரத்திற்குள் செல்வதில்லை எனவும் பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரத்தில் பெரும் சந்தை காணப்படுகின்றது. நகரத்தில் இருந்து 500 மீற்றருக்கு அதிகமான தூரம் பயணிகள் நடந்து வந்தே புதிய பேருந்து நிலையத்தில் பயணம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. இவ்விடயத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொது மக்களின் கோரிக்கையாகும்.

– நடராசா கிருஸ்ணகுமார்




# சவால்களை எதிர்கொள்வோம்; வெற்றியை வரவேற்போம்



சசிரேகா சிவப்பிரகாசம்,
(SLTS),
Ba (tamilogy),
M.A. (tamil),
உடபுசல்லாவை.

நாம் எப்போதும் வெற்றியை நோக்கி பயணித்துக் கொண்டிருப்போம், வெற்றிக்காக அல்லது இலக்கை அடைவதற்காகவே போராடிக் கொண்டிருப்போம், வாழ்க்கையின் பெரும் பகுதியை வெற்றிக்கான தேடல்களிலே தொடங்கி விடுகின்றது. சிலவேளை, முடிந்து விடுகிறது, வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதர்களும் போராட்டத்தை சந்தித்து தான் ஆக வேண்டும். இவை போராட்டம் அல்ல, சவால்கள் என்பதை அறிய வேண்டும். சவால்களைத் தொடர்ந்து சாதனை பாதையில் செல்வது சரித்திரம் படைக்க உதவுகிறது. வெற்றியை நோக்கிய சிந்தனையுடன் இருக்கும் போது, தோல்விகள் நம்மை முழ்கடித்து விடுகின்றன.



வெற்றியை விடத் தோல்வி பல ஆயிரம் படிப்பினைகளை எமக்கு கற்பிக்கும் என்பதை ஏன் மறந்து விடுகிறோம். தோல்வி என்பது ஒரு தொடக்கமே தவிர, முடிவு அல்ல, வாழ்க்கையில் வெற்றி அவசியம். ஆனால், தோல்வி கட்டாயம் தேவை என்றுதான் கூற வேண்டும். சாதித்த சாதனையாளர்கள் வாழ்வில் தோல்வி என்ற ஒன்று இருந்திடா விட்டால் இங்கு எவருமே சாதித்து இருக்க மாட்டார்கள்.

இருளை ஒளியால் வென்ற விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசன் தனது ஆரம்பக் கல்வியை இழந்தவர், கல்வியைப் பெற முடியாத நிலையில், அவரது ஆசிரியர் அவரைப் படிப்பில் ஆர்வம் காட்டவில்லை என கூறிய போதும், அவரது அம்மா அவரை விஞ்ஞானியாக்கினார். அவரின் பாடசாலைக் கல்வி நிறுத்தப்பட்டது, அதுவே இவரது வாழ்க்கைக்கு அத்திபாரமானது, எப்படியாவது முன்னேற்ற வேண்டுமென அவரது தாயாரை நினைக்கத் தூண்டியது. தனது பிள்ளையை முட்டாள் என அவர் ஒருபோதும் நினைக்கவில்லை. இந்த எண்ணமே பிற்காலத்தில் தனது மகன் மிகப் பெரிய கண்டுபிடிப்பாளராக வருவதற்குக் காரணமாக அமைந்தது.

உண்மையில், தோல்விகளால் புரையோடிப் போன நெஞ்சம் பக்குவம் எண்ணும் போர்வையால் போர்த்தப்படும் வலிமையால் திடம்பெறும் வெற்றியையும் கண்டு பெருமை கொள்ளாது தொடர்ந்து வாழ்க்கைப் பயணத்தை அனுபவத்தால் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும். ஆம் வெற்றியோ தோல்வியோ தமது மன நிலைதான் இவற்றினை நினைக்கிறது. மனப்பாங்கு ரீதியான மாற்றங்கள் வேண்டும்.

தோல்வியைக் கண்டு வருந்தி அதையே நினைத்து சமுதாயத்தில் படுதோல்வியடைந்த மனிதனாக நம்மை நாமே வரையரைப்படுத்தி விடுவதில் நாம் தான் இழப்பைச் சந்தித்தோம் என்பதை அறிந்திருத்தல் வேண்டும் பிரபல விஞ்ஞானியும் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் கூறுவதில் எவ்வளவு உண்மை

இருக்கிறது “துவண்டு விடாதீர்கள் முயன்று கொண்டே இருங்கள் தோல்வி இடம் உங்களை நீங்களே விட்டுக் கொடுக்காதீர்கள்” உண்மையில் தோல்வி வந்து விட்டால் துவண்டு கொண்டே இருப்பதில் அர்த்தம் இல்லை தோல்வியை ஒரு பொருட்டாக எண்ணாமல் இருக்கக் கூடாது. தோல்விக்கான காரணங்கள் இருக்கும், அந்த தோல்விக்கான தீர்வினை பெறுவது நாம் எமது வாழ்க்கையை ஜெயத்து காட்டுவதாக அமையும். அவ்விதம் வெற்றுப் பாதைக்குச் செல்ல முயற்சிதான் மிகவும் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

சமகாலங்களில் பிள்ளைகள் உட்பட பெரியோர்களும் தோல்வியைத் தாங்கவும் ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலையில் இருக்க மாட்டார்கள், பரீட்சைகளில் பெறுபேறுகள் பெறமுடியா விட்டால் உடனடி தீர்வாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள். காதல் தோல்விகளும், வன்முறைகளும் தொழில் ரீதியான பிரச்சினைகளும், குடும்பப் பிரச்சினைகளும், மூட நம்பிக்கைகளும், விபரீத முடிவுகளை எற்க இவர்களைத் தூண்டுகின்றன. அவரவர்களின் மனநிலைகளைப் பொறுத்தே வாழ்க்கை அமைகிறது. ஒரு மனிதன் புத்திசாலியாக இருந்தால் அவனுக்குத் தோல்வியே வராது என்பது தவறான கருத்தைக் கொண்ட புரிதலாகும்.

மனித வாழ்வில் எமது அனைவருக்கும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோல்விகள் ஏற்படத்தான் செய்கிறது. இவை வாழ்வின் யதார்த்தங்களை விளங்கச் செய்வனவாக அமைகின்றன.
“வல்லவனையும் தட்டும் வழுக்கைப்பாறை”

என்கிறது பழமொழி, இன்னொரு புறம் பார்த்தால் தோல்விகள் என்பது கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். இவை எமது வாழ்வை வளப்படுத்த வந்த சவால்கள், மொத்தத்தில் பிரச்சினைகள், தோல்விகள், துன்பங்கள், கண்ணீரின் அழுகுரல்கள், இவை ஒன்றுமே கிடையாது. எல்லாமே சவால்கள் என்றுதான் சொல்ல வேண்டும். துணிச்சலும், எதிர்கொள்ளும் திறனைப் பெறுவது தான் எம் கடமை. சவால்களின் சரித்திர நாயகன் ஆபிரகாம் லிங்கன். மிகவும் வறுமையான குடும்பச் சூழலில் பிறந்தவர்.

தமது முயற்சியினாலும் மன வலிமையினாலும் வெற்றி கண்டவர். ஐக்கிய அமெரிக்காவில் பதினாறாவது குடியரசுத் தலைவராக உயர்ந்தவர். “நான் மெதுவாகவே நடப்பேன். ஆனால், ஒருபோதும் பின் நோக்கி நடப்பதில்லை” என தைரியமாகச் சொன்னவர். அடிமை முறை சமூகத்தை முற்றிலும் மாற்ற அரும்பாடுபட்ட தலைவராவார். தன் இனம் ஒடுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்படும் போது, அவர் பின்வாங்கி ஓடிவிடவில்லை, பதிலாகப் படித்து ஓர் அதிபராக வந்து தமது இனத்திற்கான அடையாளத்தைத் தேடினார் ஆனால், வாழ்க்கையில் பல சவால்களுக்கும் முகம் கொடுத்து மனம் தளராத நிலையில், இறுதியில் அமெரிக்கா அதிபரானார். “அவர் இன்றி இன்றைய அமெரிக்காவின் நிகழ்காலம் இல்லை” என்ற அளவுக்கு சாதித்துக் காட்டியவர். அங்கவீனர்கள் அல்லது ஊனமுற்றவர்கள் என்ற சொற் பிரயோகங்கள் எல்லாம் இன்றைய அறிவு மைய நூற்றாண்டில் வழக்கொழிந்து போய்விட்டன.

மாற்றுத்திறனாளிகள் என்ற சொல்லை நாம் பயன்படுத்துகிறோம். இந்த மாற்றுத் திறனாளிகளும் மாபெரும் சாதனையாளர்களாகத் திகழ்ந்த வரலாறுகள் இருக்கத்தான் செய்கின்றன. உடல் ரீதியான சவால்களுக்கு முகம் கொடுப்பவர்கள் மூலம் சாதிக்க முடியும் என நிரூபித்துக் காட்டிய தன்னம்பிக்கை உடைய மாமனிதர் வில்லியம் ஹோகி ஞ் என்பவராவார். இங்கிலாந்தில் பிறந்த இவர், கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் அதீத ஆர்வம் கொண்டவர். தமது இருபத்து ஓராவது வயதில், “இயக்கு மரபணு நோய்” தாக்கியது அவரால் நடக்கவோ, பேசவோ முடியாமல் போனது. இவர் இன்னும் இரண்டு வருடங்கள் தான் உயிர் வாழ்வார் என மருத்துவர்கள் கூறினார்கள். ஆனால், ஹோகிஞ் மனம் தளர்ந்தாரா இல்லையே, ‘சக்கர கதிரையில் பேச்சு தொகுப்பு’ எனும் இயந்திரத்தை உருவாக்கினார். ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக பல்வேறு உடல் உபாதைகளோடு வரலாற்றுச் சாதனைகள் படைத்தார். அறிவியல் நூல்களையும் எழுதி வெளியிட்டார். பல விருதுகளுக்குச் சொந்தக்காரர் ஆனார். அவர் தனது நோயை நினைத்து ஒரு கணம் பின்னோக்கி இருந்தால் இவ்வளவு சாதித்து இருக்க முடியுமா? எல்லாவற்றுக்கும் காரணம் எமது மனப்பாங்குதான். தன்னை ஓர் நோயாளியாக நினைத்திருந்தால், மாபெரும் கணித மேதையாகத் திகழ்ந்திருப்பாரா? மனத் துணிவு தான் வாழ்க்கையை மாற்றும் மாபெரும் சக்தி என்பதை எமக்கு உணர வைத்தவர், தலை சிறந்த மாமேதை ஹோகிஞ் ஆவார். “யார் விதியும் இங்கு எழுதப்படவில்லை” என்று தமது பொன்மொழிகளால் உலகிக்கு நம்பிக்கை தீபம் ஏற்றியவர். விதி விட்ட வழி என்று நம்பி மூட நம்பிக்கையில் மூழ்கி இருப்பவர்களுக்கு ஒரு போதும் சவால்கள், சாதனைகள் என்ற சொற்களைக் கூட உச்சரிக்கத் தகுதி இல்லாமலே போய் விடுகிறது. அண்மையில், எமது நாட்டில் மாற்றுத் திறனாளி ஒருவருக்கு அமைச்சுப் பொறுப்புகளை அரசாங்கம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. நமது விதியை நாமே எழுதிக்கொள்ள முடியும் என தெளிவுபடுத்திய ஹோகிஞ்
“மனித முயற்சிக்கு எவ்வித எல்லைகளும் இருக்கக் கூடாது” என தனது வெற்றியின் அடையாளம் முயற்சி என வலியுறுத்துகிறார்.

முயற்சியை ஆயுதமாகக் கொண்டு வாழ வேண்டும் சவால்களைக் கண்டு மனம் தளராது முயற்சித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். தொடர் முயற்சி மனித முன்னேற்றத்திற்கு வழி செய்யும் வழிகாட்டியாக அமைகிறது.

எதிர் நீச்சல் போடுவதற்கான துணிச்சல் அவசியம் தேவைப்படுகிறது. உலகில் மனித நேயம் மிக்க மாமனிதர்களாகத் திகழ்ந்த நெல்சன் மண்டேலா, அன்னை தெரசா, அப்துல் கலாம் போன்றவர்கள் சவால்களுக்கு முகம் கொடுக்காமல் திடீரென சமூகத்தில் மிளிர வில்லை என்பது உண்மையான ஒரு விடயமாகும். “முடியாது என்ற ஒரு சொல்லை அகராதியிலிருந்து நீக்குவோமானால், சாதனை என்பது ஒரு பெரிய விடயப்பரப்பு ஒரு போதும் அமைந்து விடாது. அத்துடன், ஆன்மீகம் சார்ந்த விழுமியக் கொள்கைகள் எமது வாழ்வை மேலும் உயர்த்துவதற்குக் காரணங்களாகவும் அமையலாம்.

மனிதர்கள் இயல்பில் தெய்வீகமானவர்கள் என்பதையும், தெய்வீகத்தை வெளிப்படுத்துவது மனித வாழ்வின் சாரம் என்றும் தமது சொற்பொழிவுகளின் போது, கூறியவர் விவேகானந்தர் என்னும் சமயத் தலைவராவார்.

“இதயம் சொல்வதைச் செய். வெற்றியோ, தோல்வியோ அதைத் தாங்கும் சக்தி அதற்கு மட்டும் தான் உண்டு” என்று மன வலிமையைப் பற்றிக் கூறுகிறார்.

விளையாட்டு என்றாலே ஒரு சவாலான ஒரு விடயம் தான் வெற்றியோ தோல்வியோ விளையாடித்தான் ஆக வேண்டும்.

வெற்றிக்காகப் போராடித் தான் தீர வேண்டும், உள்ளக விளையாட்டுகள், வெளியக விளையாட்டுகள் என்ற ரீதியில், விளையாட்டுகள் அமைகின்றன. மல்யுத்தம், குத்துச்சண்டை என்ற பாரதூரமான விளையாட்டுகளும் இருக்கத்தான் செய்கின்றன. பிரபல குத்துச்சண்டை வீரரான முகமது அலியும் பல்வேறு சவால்களை
தமது வாழ்வில் சந்தித்த வீரராவர். அவர் சிறந்த குத்துச் சண்டை வீரருக்கான விருதினை அமெரிக்க இராணுவத்தில் கட்டாய சேவை புரிய மறுத்தால் அவரது விருதினைப் பறித்தனர். அவர் மனம் தளராது, தொடர்ந்து முயற்சித்து, பல விருதைப்பெற்றுக் கொண்டார். “வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பது வீழ்ச்சியல்ல, இரண்டுமே அடுத்த கட்ட வளர்ச்சிக்கானது என்று கூறும் முகமது அலி வெற்றியையும் தோல்வியையும் சரி சமமாகக் கருதி இரண்டுமே அடுத்தகட்ட வளர்ச்சிக்கானது என்பதை நிறுவுகிறார். வாழ்க்கை வாழ்வதற்கே சவால்களைச் சாதித்துக் காட்டுவோம். வெற்றியை நாம் வரவேற்றுக் கொண்டாடுவது போல, சவார்களையும் கொண்டாடி அதற்கான தீர்வினை பெற்று வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடுவோம்.

# விதவை தொடர்பான சமூகப் பார்வை



நா.உசாந்தினி,
2ஆம் வருடம்,
இரண்டாம் அரையாண்டு,
யாழ்.பல்கலைக்கழகம்.

பெண்கள் சமூகத்தின் முதுகெலும்பு என்பது மறுக்கமுடியாத உண்மை. அவர்கள் சமூகத்தில் பல்வேறு பங்கு வகித்து, குடும்பம், சமூகம் மற்றும் நாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வித்திடுகின்றனர்.

ஆரம்பக் காலத்தில் வீட்டுக்குள் முடங்கி இருந்த பெண்கள், இன்று பல்வேறு துறைகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். தொழில், அரசியல், கலை, விளையாட்டு என எல்லாத் துறைகளிலும் பெண்கள் தங்கள் இருப்பை உணர்த்தி வருகின்றனர்.

இருப்பினும், சமூகத்தில் பெண்கள் இன்னும் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பாலின சமத்துவம், வேலைவாய்ப்பு சமத்துவம், பாதுகாப்பு போன்ற பிரச்சினைகள் இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. சமூகம் என்பது ஒரே இடத்தில் வாழும் மக்கள் கூட்டத்தைக் குறிக்கின்றது.

பொதுவான அனுபவங்கள், நம்பிக்கைகளைக் கொண்டுள்ள மக்கள் தொகையை இப் பதம் விளக்குகின்றது. மேலும், இதன் உறுப்பினர்கள் ஒரே நோக்கங்களுக்காக அல்லது ஒரே வகையான ஒத்துழைப்புகளை முன்னேற்றுவதற்காக ஒன்றிணைவார்கள். இதை "கூட்டுக்குரல் கூப்பிடும், தனிக் குரல் மட்டும் கேட்காதது" என்ற பழமொழி சமூகம் ஒன்றிணைந்து பேசும் தன்மையைச் சுட்டுகின்றது.

விதவைகள் என்று நோக்குகின்ற போது, ஒரு பெண் கணவனை இழந்த நிலையாகும். விவாகரத்து, விபத்து, போர், இயற்கை மரணம் போன்றவற்றால் கணவனை இழத்தல், கணவனால் கைவிடப்படல், கணவன் காணாமல் ஆக்கப்படல் உள்ளிட்ட பல காரணங்களால் சமூகத்தில் விதவைகள் உருவாகின்றன. கணவனை இழந்த பெண்கள் வாழ்க்கையில் தனிமை, சவால்கள் மற்றும் துயரங்களை எதிர்கொள்கின்றனர்.

அவர்கள் சமுதாயத்தில் தொடர்ந்து, புறக்கணிப்பு, மன உளைச்சல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

விதவைகளின் நிலை பற்றி நோக்குகின்ற போது, உலகளாவிய ரீதியில் 258 மில்லியன் விதவைகள் காணப்படுகின்றன. இவர்களில், 10 பங்கினர் தீவிர வறுமையில் வாழ்பவர்களாக உள்ளனர்.

258 மில்லியன் விதவைகளில் ஐந்தில் ஒரு பங்கினர் ஆப்கானிஸ்தானிலும் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியா மற்றும் சீனாவிலும் வாழ்கின்றனர்.

இவர்களில் 10 சத வீதமானோர் தனியாகவும் 70 சதவீதமானோர் வயது வந்த குழந்தைகளுடனும் மீதமுள்ளவர்கள் பிற நபர்களுடன் தங்கி வாழ்கின்றனர்.

தெற்காசிய நாடுகளில் மொத்தம் 22.4 சதவீதமான விதவைகள் காணப்படுவதுடன், அவர்களில் இந்தியாவில் 44 மில்லியன் பேரும், நேபாளத்தில் 4,986,062 பேரும் வசிப்பதுடன், இங்கு விதவை உருவாக நோய்களும், யுத்தமும் செல்வாக்கு செலுத்தி இருப்பதுடன், இவர்கள் ஆழமான வறுமையின் கீழ் வாழ்பவர்களாக இருக்கின்றனர்.

இலங்கையில் 471,429 விதவைகள் காணப்படுகின்றனர். இங்கு உள்ள மொத்த விதவைகளில் 68 சதவீதமான வடமாகாணத்தில் காணப்படுகின்றனர். இவர்களில் 58,028 இவர்கள் அதிகமாக யுத்தத்தில் கணவனை இழந்தவர்களாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 10.9 சதவீதமானவர்கள் யாழ்ப்பாணத்திலும் 29.4 சதவீதமானவர்கள் கிளிநொச்சியிலும் 21 சதவீதமானவர்கள் மன்னாரிலும் 20.5 ஆனால், முல்லைத்தீவு மற்றும் வவுனியாவிலும் வசிக்கின்றனர். இதிலும், அதிகமான விதைகள் வாழும் கிளிநொச்சி மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளது.

விதவையாக வாழும் பெண்ணின் வாழ்க்கையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பெரும்பாலும் அவள் சமுதாயம் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியில் காணப்படும் மாற்றங்களின் அடிப்படையில் இது ஆரம்பமாகின்றன. விதவையாக வாழும் பெண்ணுக்கு, தன்னுடைய வாழ்க்கையை தானாக நிர்வகிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். கணவன் இல்லாமல், அவள் தன் வாழ்வை வழிநடத்துவதற்கான உழைப்பை மேற்கொண்டு புதிய திறன்கள் கற்றுக்கொண்டு, தனது சுயநலத்தை வலுப்படுத்தி, தன்னம்பிக்கையை பெறுகிறாள்.

"அருவினை யென்ப ஆக்கம் பழவினையும் தீரின் துணையல்ல தில்"

என்ற குறட்பா மூலம் விடாமுயற்சி பலம் தரும் என்ற அர்த்தத்தை எடுத்தியம்புகின்றது. குறிப்பாக சமூகத்தில் விதவை என்று மூளையில் முடங்காது விடா முயற்சியால் சாதிக்கிறார்கள்.

பாலர் ஜவுல்,பேக்கரி,கைவினை, அழகு சாதனங்கள் போன்ற சிறு தொழிலைத் தொடங்கி முன்னோக்கிச் செல்லுகிறார்கள் இதனால் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகப் புத்துணர்ச்சி அளிக்கிறார்கள். மேலும், தாம் உற்பத்தி செய்த பொருட்களை ஒன்லைன் 'பிளாட்பார்ம்'களில் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்குச் சந்தர்ப்பம் காணப்படுவதனால் உலகளாவிய சந்தையில் அறிமுகம் ஆகிறார்கள் அதனால் சமூகத்தின் பேசு பொருளாக இன்று மாறுகின்றனர்.

கணவர் இல்லாமல் வாழும் போது, அவர்கள் தனிமையிலும்,மன அமைதியிலும் தன்னுடைய ஆற்றல்களை மேம்படுத்துகின்றார்கள். இது அவளுக்கு உளவியல் சிந்தனையைச் செம்மைப்படுத்த உதவும் மற்றும் தனி மனிதராக முன்னேறத் துணை புரிகின்றது.

விதவைகள் சமுதாயத்தில் மட்டுமே தங்காமல் அவர்கள் தங்கள் குடும்பத்தை மற்றும் சமூகத்தை முன்னேற்றுவதற்காக புதிய வழிகளில் வேலை செய்ய முற்படுகின்றார்கள் இதன் மூலம் அவர்களது சமூக பங்கு வளர்ந்து செல்கின்றது இதனால் அவளுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகின்றன.

தமது அறிவை மற்றும் திறமைகளை மேம்படுத்தும் அவகாசம் விதவை ஆன பின்பு கிடைக்கிறது.

இன்று விதவைகள் கல்வி மற்றும் தொழில் வாழ்வில் முன்னேறுவதற்காக புதிய வாய்ப்புகளை நோக்கிப் பயணித்துச் சாதிப்பதனை அவதானிக்க முடிகின்றது. பல விதவைகள் சமூக சேவைகளில் ஈடுபட்டு தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து மற்றவர்களுக்கு உதவுகின்றனர்.

இது அவர்களுக்கு உளவியல் சந்தோஷம் மற்றும் சமூகப் பங்கை உருவாக்குகின்றது எனலாம்.

மேலும் இன்று விதவைகளை ஊக்கப்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் சமூக ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன குறிப்பாக 'அஸ்வெசும' திட்டம், வலுவிழந்தோர்களுக்கான கொடுப்பனவு,விதவைகளுக்கான கொடுப்பனவு போன்றவற்றினை குறிப்பிடலாம். இதனை ஒரு தூண்டு கருவியாகக் கொண்டு வாழ்க்கையைத் துணிச்சலோடு வெற்றிகரமாக நடத்துகின்றனர்

இவ்வாறு பல ஒத்துழைப்புக்கள் சமூகத்தில் காணப்பட்டாலும் பலர் இன்றும் இழக்காரமாக பார்க்கும் சூழல் காணப்படுகிறது .

"சிறு கண்ணீர் தாயிரண்டு காமநோய் செய்தற்றாய் பெண்டிர் பெருமக்கள் துயர்" என்ற திருக்குறளானது தனது வாழ்க்கையில் கணவனை இழந்த பின் பெண்ணின் தனிமையைக் காட்டுகிறது. அவை அவர்கள் சமூகப் பொருளாதார உளவியல் சவால்களை ஏற்படுத்தி விடுகிறது மேலும் அவர்கள் பல அடக்குமுறைகளையும், புறக்கணிப்புகளை எதிர்கொள்கிறார்கள்.

குறிப்பாக சமயங்களில் புறக்கணிக்கப்படுதல், நற்காரியங்களில் முன்னின்று பங்கேற்க அனுமதி வழங்கப்படுவதில்லை இதனால் அவர்கள் தனிமைப்பட்டவர்களாகவும் தாழ்வு மனப்பான்மை உடையவர்களாகவும் வாழ நேரிடுகின்றார்கள்

சில சமயங்களில் விதவைகள் அதிர்ஷ்டம் குறைவானவர்கள் என கருதப்படுவதால் சமூகத்தில் நற்செயல்களில் உள்வாங்கப்படாது புறம் தள்ளுகின்ற தன்மை இன்று தலைவிரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக ஒருவர் ஒரு செயலை தொடங்குகின்ற போதும் முன்னுக்கு விதவை வருகின்றார் எனின் அச்செயல் இனிதே நிறைவேறாது என்று அவர்களை வார்த்தைகளால் தாழ்த்துகின்ற எண்ணப் பாங்கினை கூறலாம்.

கணவனை இழந்த பெண்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாவதோடு வெளியில் கூற முடியாத பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். பெரும்பாலானவர்கள் பலவிதமான துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உள்ளதுடன் வாய் மொழி பிரயோகத்துக்கு முகம் கொடுக்கிறார்கள்.

2% பெண்கள் மறுமணம் செய்து கொள்ள விருப்பத்துடனும் பல பெண்கள் மறுமணம் செய்ய விரும்பாத சூழ்நிலையில் உள்ளனர். ஆனால் அவர்களும் சமூகத்தில் பெரும் விமர்சனங்களுக்கு உள்ளாகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை விதவைகள் என்ற பிரச்சினை ஆரம்பத்திலிருந்து காணப்பட்டாலும் போர்ச் சூழலுக்குப் பின்னரே இப் பிரச்சினை அதிகரித்துள்ளது.

விதவைகள் அதிகளவு சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இங்கு நிலவும் பொருளாதார நெருக்கடி அவர்களின் நிலையை மேலும் வலுவடையச் செய்துள்ளது.

விதவைகள் இன்று தொழில் ரீதியிலும் வன்முறைகளைச் சந்திக்கின்றனர். குறிப்பாக இவர்கள் தமது தனிப்பட்ட நிலையை வெளிப்படுத்த விரும்பாத போதிலும் விதவைகள் என்ற நிலை அவர்களின் வலிமை என்ற நிலையைக் கட்டுப்படுத்துகிறது. இதனால் சக ஊழியர்களிடமிருந்தும்

உயர் அதிகாரிகளிடமிருந்தும் இவர்களுக்கு நம்பிக்கை குறைவான தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது இதனால் அவர்களே அவர்களின் திறமைகளைக் குறைத்து மதிப்பிடுகின்றனர்.

விதவைகள் பெரும்பாலும் தமது குடும்பத்தில் ஒரு ஆதாரமாக இருப்பதனால் அவர்களின் வேலை சூழலில் ஊதியம் மற்றும் ஆதரவான சூழல் அவசியமானதாகும்.

இருப்பினும் பலர் குறைந்த ஊதியத்தில் வேலை செய்வதோடு, முக்கிய பதவிகளில் முன் வரச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை கணவனை இழந்த துயரத்தில் ஏற்பட்ட மன உளைச்சல் அவர்களின் தினசரி வேலை சூழலை அச்சுறுத்தும். மன அமைதி இல்லாததால் அவர்களின் செயற்றிறனும் குறைவடைகின்றது.

தற்போதைய சமூகத்தில் விதவைகள் தொடர்பான பல தவறான சித்தரிப்புகள் நிலவுகின்றன.

அவை அவர்களின் வாழ்க்கையை மட்டுமன்றி அவர்களது பிள்ளைகளின் வாழ்க்கையும் மாற்றுகின்றது.

இவ்வாறான சித்தரிப்புகள் பாரம்பரிய நம்பிக்கையிலிருந்து இன்று வரை காணப்படுகிறது இவர்களுக்கு ஒரு ஆணின் உதவி கிடைக்கும் போது அந்த ஆணையும் விதவைப் பெண்ணையும் சேர்த்துக் கதை கட்டுகின்ற சூழலாக இச்சூழல் மாறி வருகிறது.

குறிப்பாக, சமூகத்தில் செயல்திட்டங்களை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுடன் அதிகம் சித்தரிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு தாய் சித்தரிக்கப்படுகிற போது, அது பிள்ளைகளின் கற்றல் மற்றும் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கிறது.

பெண் தனியாக வாழ முடியாத சூழலில் அவர்கள் கணவனை இழந்த நிலையில், தமது பெற்றோரின் கீழோ அல்லது அவர்களின் சகோதரரின் கீழோ தங்கி வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

பாரதி பெண் அடிமைத்தனம் பற்றிக் கூறினாலும், இன்று அதிகம் ஏனைய பெண்களை விட விதவை பெண்கள் ஒருவரின் கீழ் அடிமைப்பட்டு வாழுகின்றார்கள் குறிப்பாகப் பாதுகாப்பு, பொருளாதார ரீதியாக ஏற்படுகின்ற இடர்பாடு, பிள்ளைகளின் சிறப்பான எதிர்காலம் போன்ற காரணிகள் இவற்றிற்கு வித்திடுகின்றன.

இதனால் அவர்களின் கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம், முடிவெடுக்கும் சுதந்திரம் என்பன பறிக்கப்படுகின்றன மேலும் இவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்படுவதால், பிள்ளைகள் வேலைக்குச் செல்கின்ற சூழல் உருவாகிறது.

இதனால் சிறுவர் துஷ்பிரயோக செயல்கள் சமூகத்தில் தலைவிரிக்கின்றது. காரணம், இவர்களைக் கேள்வி கேட்க யாரும் இல்லை என்ற நிலை. இவ்வாறு பல காரணிகளால் விதவை என்ற சொல்லைக் காட்டி சமூகத்தில் புறமொதுக்கிறார்கள்.

விதவையான பெண் வாழ்க்கையில் மிகப்பெரிய துயரத்தைச் சந்திக்க வேண்டி ஏற்படுகிறது.

கணவனை மட்டுமில்லாமல், அவளின் எதிர்பார்ப்புகளும், கனவுகளும் இங்குப் புதைக்கப்படுகின்றன.

இந்த இழப்பு அவர்களின் மனநிலையைப் பாதிக்கின்றது. விதவைகள் உடை அலங்காரம் ஆபரணங்கள் போன்றவற்றினை அணிவதில் பல கட்டுப்பாடுகளைச் சந்திக்கின்றனர். இவ்வாறு புறக்கணிப்புக்கு உள்ளாகும் விதைகள் தங்களின் தனித்துவம் மற்றும் ஆளுமையின் அடையாளமாகக் கருப்பு சேலை, வெள்ளை உடை, மற்றும் பளபளப்பற்ற ஆடைகளை அணிகிறார்கள். இது தான் இழப்பின் அடையாளம் என்ற அடிப்படையில் சமூகத்தில் பார்க்கின்றார்கள்.

மேலும், இளம் வயதில் கணவனை இழக்கும் சந்தர்ப்பத்தில் குடும்பத்தினரால் மறுமணம் செய்யத் தூண்டப்படுகிறார்கள். இவ்வாறு இவர்கள் மறுமணம் செய்கின்றபோது, பிள்ளைகளிடையே பாகுபாடுகள் உருவாகின்றன. இது குடும்பங்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

பெண்கள், கணவனை இழக்கும் போது, அவர்களின் பொருளாதாரமானது முடக்கப்படுகிறது.

அதன் பின்பு அந்தப் பெண்கள் குழந்தை வளர்ப்பு முதல் பொருளாதார தேவைகள் வரை கவனிக்க வேண்டிய இடத்தில் உள்ளார்கள். இதுவரை கணவனும் மனைவியும் இணைந்து செய்த அனைத்து கடமைகளும் இப்போது பெண் மாத்திரம் கவனிக்க வேண்டும் என்ற நிலை உருவாகின்றது.

இழப்புகளின் வலி ஒருபுறமும் பொறுப்புகளின் கணம் மறுபுறமும் என பெண் தடுமாற்றங்களுக்கு முகம் கொடுக்கின்றார்.

இதனால் விதவைகள் எதிர்நோக்கும் சவால்கள் பொருளாதார சிக்கல்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்த ஐக்கிய நாடுகள் சபை தனது 65 ஆவது பொதுச்சபை அமர்வில் சர்வதேச விதவைகள் தினத்தில் A/RES/65/189 என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.

விதவைகள் தீண்டத்தகாதவர்கள், அதிர்ஷ்டம் அற்றவர்கள் என்கிற பாரம்பரியத்தை உடைத்தெறிதல் மட்டுமல்லாது, அவர்களும் சமூகத்தில் ஒருவர் என்கிற சமத்துவ நிலையைப் பேணவும் மற்றவர்களைப் போல அவர்களும் வாழ உரிமை கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விழிப்புணர்வை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட நடவடிக்கை முக்கியமானதாக அமைகிறது.

அவர்களுடைய தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அவர்களே வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை சமூக மட்டத்தில் ஏற்படுத்திக் கொடுத்தல், அரச, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் சமூகம் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து குரல் எழுப்புதல், சுயதொழில் முனைவோர் திறன்களை வளர்க்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தல், சொத்துரிமை மற்றும் மறுமணம் தொடர்பான சட்டங்களை வலுப்படுத்தல், பெண்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தல், விதவைகளுக்கு ஆதரவு குழுக்களை உருவாக்குதல் போன்ற செயல்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் விதவைகள் எதிர்நோக்குகின்ற சவால்களைக் குறைத்துக்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை விதவைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இன்று உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்ற ஒரு பிரச்சினையாகும். யுத்தம், இயற்கை அனர்த்தம், வீதி விபத்து போன்ற காரணங்களால் கணவனை இழந்து விதவை என்ற நிலையை அடைந்து போகின்றனர்.

இவர்கள் பாதுகாப்பின்மை, வறுமை, பொருளாதார வசதிகள் இன்மை, அடிப்படை தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை தொடர்ச்சியாக எதிர்கொள்கின்றமையால் அவர்களை முன்னேற்ற வேண்டிய தேவை காணப்படுகிறது.

**சிறுவர் துஷ்பிரயோக செயல்கள் சமூகத்தில் தலைவிரிக்கின்றது. காரணம், இவர்களைக் கேள்வி கேட்க யாரும் இல்லை என்ற நிலை**

**புறக்கணிப்புக்கு உள்ளாகும் விதைகள் தங்களின் ஆளுமையின் அடையாளமாகக் கருப்பு, வெள்ளை உடை, மற்றும் பளபளப்பற்ற ஆடைகளை அணிகிறார்கள்**

**இழப்புகளின் வலி ஒருபுறமும் பொறுப்புகளின் கணம் மறுபுறமும் என பெண் தடுமாற்றங்களுக்கு முகம் கொடுக்கின்றார்**



# பொன் விழாவினை கொண்டாடும் யாழ். பல்கலைக்கழகம்



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்,
முன்னாள் ராஜதந்திரி.



“பல்கலைக்கழகமானது பிரகாசமானதும், சுதந்திரமானதும், மற்றும் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமொரு இடமாகத் திகழ வேண்டும்” என்று இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரான பெஞ்சமின் டிஸ்ரேலி என்பவர் 1873 மார்ச் மாதம் 11ஆம் திகதி இங்கிலாந்திலுள்ள மக்கள் சபையில் (*House of Commons*) பல்கலைக்கழகம் தொடர்பானவொரு கருத்தொன்றினைக் குறிப்பிட்டிருந்தார்.

பல்கலைக்கழகமானது, அறிவினையும், புரிந்துணர்வினையும், ஏற்படுத்தக்கூடியதொரு இடமாகவும், மாணவர்கள் மூலாதாரங்களைத் தேடி அறிந்து கொள்ளக் கூடியதொரு வசதியினை உருவாக்கும் இடமாகவும் இருப்பதனால், அதனைப் பிரகாசமெனவும், பல்கலைக்கழகமானது, நெகிழ்வுத் தன்மை கொண்டதொரு இடமாகவும், மாணவர்கள் அச்சமின்றி தமது அபிப்பிராயங்களை, கொள்கைகளை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்கவர்களாக இருத்தல் அவசியம் என்பதனால் அதனை சுதந்திரமிக்க நிறுவனம் என்றும் மாணவர்களது கல்விக்குப் பொருத்தமானதொரு இடமாக இருப்பதோடு, மாணவர்களது எதிர்காலத்துக்கு தேவையான திறமைகளையும், ஆளுமைகளையும், பயிற்சிகளையும், பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றலை வழங்குவதனால், அதனை கற்றல் நடவடிக்கைகளுக்கு உறுதுணைப் புரியமொரு இடமென்றும் இவரது கூற்றை நாம் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

மேற்கூறிய கருத்தினை நிரூபிக்கும் வகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தனது பணியினை செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

சாமானியர்களாக இருந்த மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றுவதற்குத் தேவையான ஒளியையும், சுதந்திரத்தையும், திடமான மன உறுதியினையும், சமூக இயைவாக்கத்தையும், தாராளமாக வாரி வழங்கி வருகின்றது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில், யாழ்ப்பாணம் உட்பட, ஆறு வளாகங்களை நிர்மாணிக்கப்பட வேண்டுமென்று 15ஆம் திகதி ஜூலை மாதம் 1974இல் அன்றைய அரசினால் பிரகடனம் செய்யப்பட்டது. இதற்கிணங்க, யாழ். வளாகத்தை ஸ்தாபிக்கும் நோக்கில் 1921இல் ஒகஸ்ட் மாதம் சேர் பொன் இராமநாதனால் நிர்மாணிக்கப்பட்டிருந்த திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்றைய பரமேஸ்வராக் கல்லூரியை, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக ‘யாழ்ப்பாண வளாகம்’ என்ற பெயரில் 6ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 1974இல் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அப்போதைய பிரதமராக ஸ்ரீமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்கவால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த வளாகத்தின் முதல் தலைவராக கலாநிதி க.கைலாசபதி தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1979 ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து சுதந்திரமானதும், சுயாதீனமிக்கதுமானதொரு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பரிணமிக்கத் தொடங்கியதானது ஒரு சிறப்பம்சமாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகத் தமிழறிஞர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நியமிக்கப்பட்டிருந்தார். யாழ். வளாகம் ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்துடன் ஐம்பது ஆண்டுகள் நிறைவுறுகின்றன.

பொன்விழா கொண்டாடும் எமது பல்கலைக்கழகமானது கடந்த காலங்களிலும், இன்றும் ஆற்றி வரும் பணிகள் அளப்பரியவை. தமிழ் மக்களின் அறிவுக் கருவூலமாகவும், தமிழ்ச் சமூகத்தின் இருப்புக்கும், அதனது வளர்ச்சிக்கும், அதனுடன் இணைந்த வகையில் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தி வருகின்றமையானது இதனது சிறப்பினைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

பொன்விழாவையொட்டி, பல்கலைக்கழகமானது பல்வேறு ஆக்கப்பூர்வமான மாநாடுகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் ஆகியனவற்றை ஏற்பாடு செய்து கொண்டிருப்பதானது இதனது பெருமையை இன்னும் வலு சேர்க்கின்றது.

முதலாவது சர்வதேச கல்வியியல் மாநாடு, ஐந்தாவது அனைத்துலக தமிழியல் மாநாடு, முத்தமிழ் விழாக்கள், சர்வதேச சுற்றுலா தினத்தை முன்னிட்டு ‘சுற்றுலாவும் அமைதியும்’ என்ற துணைப் பொருளில் இந்தியாவின் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தியமையானது பெருமைக்குரிய விடயங்களாகும்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல, பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் தற்போது நிர்மாணிக்கப்பட்டிருக்கின்ற அலங்கார நுழைவாயிலானது பல்கலைக்கழகத்தின் மாட்சியினை, அதனது கம்பீர தோற்றத்தினை மேலும் மெருகூட்டி நிற்கின்றது.

பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதற்கு ஒரு சில பரோபகாரிகளின் உதவியும், சில நல்ல நண்பர்களின் ஒத்தாசையும், ஓரளவு கிடைக்கப் பெற்றிருந்தாலும், அவைகளால் அந்தக் காலகட்டத்தில் நிலவிய வாழ்க்கைச் செலவினை சமாளிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. இந்நிலையில், கல்வியைத் தொடர முடியுமா? என்ற கேள்விக்குறி என்னுள் எப்பொழுதும் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

தொடர்ச்சியாக நடந்து கொண்டிருந்த யுத்தங்களின் காரணமாக, பல்கலைக்கழகமானது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய சூழ்நிலை உருவானது. மாணவர்களது போராட்டங்கள், வகுப்பு பகிஷ்கரிப்புகள், மாணவர்களது இடப்பெயர்வுகள், கல்வி நடவடிக்கைகளுக்கான இடைநிறுத்தல்கள், தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டங்களது. இதனால், பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுமா? என்ற ஐயமும் நிலவியது. இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியிலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாடவிதானங்களை நிறைவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலிருந்த பல்கலைக்கழக நிருவாகத்தை இத்தருணத்தில் பாராட்ட வேண்டும்.

எண்ணிறைந்த சவால்களுக்குப் பல்கலைக்கழகமானது முகம் கொடுத்திருந்தாலும் கூட, அது கல்விக்கான முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் திகழ்ந்தது. எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு அந்த சவால்களை முறியடிக்கும் விதமாக, மக்களின் பாரம்பரியத்தை, கலை, கலாசாரங்களை, அவர்களது உணர்வுகளை வளர்த்தெடுக்கும் இடமாகவும், தமிழ் மக்களின் அறிவினை ஒளிர வைக்கும் ஒரு இடமாகவும் தொடர்ந்து இயங்கியது

புதிய ஊர், புதிய நட்புகள், புதுப்புது அறிமுகங்கள், அனுபவங்கள் எல்லாம் எனக்கு விசித்திரமாகவே தென்பட்டன. பல்கலைக்கழகத்துக்கும், தங்கி இருந்த விடுதிக்கும் செல்வதற்கு துவிச்சக்கர வண்டியின் தேவைப்பாடு இருந்தது. அதற்காக அதனைப் பழகி, பயின்று கொண்டதே பல்கலைக்கழகத்து வாழ்க்கையுடன் தானென்று எண்ணும் பொழுது மனதிற்கு மிகவும் இதமாக இருக்கின்றது. பின்னாட்களில் துவிச்சக்கர வண்டி மூலமாகப் பல பிரதேசங்களில் வசித்த, எனது பள்ளிப் பருவத்தில் கற்பித்த, முன்னைய ஆசிரியப் பெருமக்களைச் சந்திக்க நேர்ந்ததும் பல்கலைக்கழகத்துப் பிரவேசத்துடன் தான்.

பல்கலைக்கழகம் செல்லும் வரை புகையிரதங்களில் பயணம் செய்த அனுபவம் கூட இருந்திருக்கவில்லை. முதன்முதலாக ‘உடரட்டமெனிக்க’, ‘யாழ்தேவி’ ஆகிய தொடருந்துகளில் பயணம் செய்த பொழுது, ஏதோ முன்பின் அறிந்திராத ஓர் ஆனந்தம். ‘இரயில் பயணங்களில்’ கூட பல நட்புகள் கைகோர்ப்பதும், சுவாரஸ்யமான சம்பாஷணைகள் இடம்பெறுவதும், தவிர்க்க முடியாத அம்சங்களாக இருந்தன.

யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பற்றி புவியியல் பாடத்திலும், அங்கு ஆண்ட மன்னர்களைப் பற்றி வரலாற்றுப் பாடத்திலும், கற்றிருந்ததால், அந்த மண்ணின் தன்மையினை மாணவப் பருவத்திலேயே அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

அங்குச் சென்றதன் பின்னர் தான் அங்குள்ள மக்களின் விடாமுயற்சி, கடின உழைப்பு, ‘கல்வியே மூலதனம்’ என்ற மனப்பான்மை, அவர்களது அறிவாற்றல், திறமைகள், கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை அன்றைய காலகட்டத்தில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

எத்துணை உயர் பதவிகளை வகித்திருந்தாலும் கூட , பெருமளவானவர்கள் விவசாயத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட தன்மையானது அவர்களது தனித்துவத்தை நிலை நிறுத்தியதோடு மட்டுமல்லாது, முடிந்தளவு தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற படிப்பினையையும் , தன்னம்பிக்கையினையும் ஏற்படுத்தியது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகமானது தனது வரலாற்றில் பல்வேறுபட்ட திறமை வாய்ந்த தொழில் சார் நிபுணர்களையும், ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான தொழில் வான்மையாளர்களையும், இலங்கையில் மாத்திரமல்லாது, உலகெங்கிலும் உருவாக்கி இருக்கின்றது.

அந்த வகையில் எமது 1981இல் தொகுதியினைச் சேர்ந்த கலைப்பீட, வணிகப்பீட நண்பர்கள் கல்வியலாளர்களாக, தொழிலதிபர்களாக, திட்டமிடல் சேவை அதிகாரிகளாக,வங்கி முகாமையாளர்களாக , அரசாங்க அதிபர்களாக, ராஜதந்திரிகளாக, கணக்காளர்களாக, கணக்காய்வாளர்களாக , இன்னும் பல துறைகளில் உருவாகியிருப்பதானது பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்த கீர்த்தியாகும்.

2009இல் யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் பல்கலைக்கழகத்தில் பாதிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டதாகவும், அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

இன்று இந்த பல்கலைக்கழகத்தின் வசதிகள் அதிகரிக்கப்பட்டு இருப்பதோடு, பல்வேறுபட்ட பீடங்களும் , புதிய கற்கை நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட் டிருக்கின்றன. மாணவர்களின் உள்ளீடுகள் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றது. பட்டப்படிப்பு, பட்ட பின் படிப்பு போன்ற துறைகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு இருப்பதோடு, காலத்திற்கு ஏற்ற விதத்தில் புதிய துறைகளும் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. பல்வேறு துறை சார் ரீதியாக ஆய்வுகளை மேற்கொள்ளும் வசதி வாய்ப்புகளும் இன்று காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் எம்முடன் கல்வி கற்றவர்களுள் சிலரும், அது போல, எமக்குக் கற்பித்த வழிகாட்டிகளான பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி சார்



உத்தியோகத்தர்கள் ஆகியோருள் சிலரும் இந்த மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றிருந்தாலும் கூட, அவர்களது சேவைகள் காலத்தால் அழியாதவை.

எனது வாழ்வில் மறக்க முடியாத ஓர் அம்சம் தான், பாரதத்தின் விஞ்ஞானியும், முன்னாள் ஜனாதிபதியுமான, டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களது யாழ். பல்கலைக்கழகத்து விஜயம்.

அரசின் மும்மொழித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக 2012இல் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த விஞ்ஞானியும், இந்தியத் தேசத்தின் முன்னாள் ஜனாதிபதியுமான, அப்துல் கலாமுடன் இணைந்து ஒரே உலங்கு வானூர்தியில் பயணிக்கும் வாய்ப்பு கிட்டியதுடன், அவர் கலந்து கொண்ட அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றும் சந்தர்ப்பமும் எனக்குக் கிட்டியது.

அந்த விஜயத்தின் ஒரு பகுதியாக, அவரது முதலாவது மாணவர் சந்திப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் நிகழ்ந்தது.

சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலான காலப் பகுதியில் இதே கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வணிகமாணிப் பட்டம் பெறுவதற்காக ஒரு மாணவனாகக் கலந்து கொண்டேன். அதன் பிறகு சுமார் இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு , முதன் முறையாக, யான் கற்ற பல்கலைக்கழகத்தில், அதே கைலாசபதி கலையரங்கத்தில் பார் போற்றும் விஞ்ஞானியும், கல்விமானுமான அப்துல் கலாமுடன் கால் பதித்தது நான் செய்த பாக்கியமும், கல்விச்சாலை சாதித்த சாதனைகளும் என்றால் மிகையாகாது.

இக்கட்டான கால கட்டத்தில் பல்கலைக்கழகமானது கல்வி நடவடிக்கைகளை தன்னால் இயன்றளவு மேற் கொண்டதனால் தான், எம்மால் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பினை பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் நிறைவு செய்யக் கூடியதாக இருந்தது.

அதன் காரணமாகவே, எங்களால் மிகவும் உயர்ந்த பதவிகளுக்கு வரக் கூடிய சூழ்நிலையும் உருவானது. இது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து, வறுமைக்கு மத்தியிலும் எமது கல்வியினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும், எம்மை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கும் காரணமாக இருந்தது எமது பல்கலைக்கழகம் என்று எண்ணும் பொழுது மிகவும் பெருமையாக இருக்கின்றது.

தனித்துவமிக்க எமது பல்கலைக்கழகமானது, எதிர்காலத்தில் பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளையும் , உலக உலகமயமாக்கத்தின் போக்குக்கு இணங்க பொருத்தப்பாடு கொண்ட கல்வி நெறிகளையும், அதனுடன் இணைந்த வகையில் பல்வேறுபட்ட பயிற்சிகளையும் பயிற்றுவிக்க வேண்டுமென்பதே எங்களது அவா.

உலகளாவிய பல்கலைக்கழகத் தர வரிசைகள் பதினெட்டு செயல்திறன் பணிகளில் சிறந்த பல்கலைக்கழகங்களை மதிப்பிடுகின்றன. அவற்றில் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவுப் பரிமாற்றம், மற்றும் சர்வதேச மயமாக்கல் ஆகியன முக்கிய பணிகளாகும்.

இவ்வாறான பணிகளை உன்னதமான நிலையில், மேற்கொண்டு, உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையிலும்,

அது போல, இலங்கை பல்கலைக்கழகத் தரவரிசையிலும், எமது பல்கலைக்கழகமானது முதனிலையில் இருக்க வேண்டும் என்பதே எம் பழைய மாணவர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஐந்து தசாப்தங்களை கடந்து வந்த எமது பல்கலைக்கழகமானது , தொடர்ந்து தனது சேவைகளைக் காத்திரமான முறையில் முன்னெடுத்துச் செல்ல எங்களுடைய மனப்பூர்வமான வாழ்த்துகள்.



கென்யா

காலபந்து ரசிகர்களுக்கு இடையே மோதல்:

# 100க்கும் மேற்பட்டோர் பலி

கென்யாவில், கால்பந்து ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கென்யாவில் இரண்டாவது பெரிய நகரான என்சரிகோரில், உள்ளூர் கால்பந்து போட்டி ஒன்று நடைபெற்றது. இந்தப் போட்டியை ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரசிகர்கள் நேரில் கண்டுகளித்துக்கொண்டு இருந்தனர்.

போட்டியின்போது, நடுவர் சர்ச்சையான தீர்ப்பு வழங்கியதாகக் கூறப்படுகிறது. இதனால் ஒரு தரப்பு ரசிகர்கள் ஆத்திரமடைந்து கால்பந்து மைதானத்தை ஆக்கிரமித்துள்ளனர்.

இதைக்கண்ட மற்றொரு தரப்பினரும் மைதானத்தில் புகுந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டுள்ளனர். இந்த மோதல் ஒரு கட்டத்தில் வன்முறையாக மாறியுள்ளது.

மைதானம் மட்டுமின்றி, மைதானத்திற்கு வெளியேயும், வீதிகளிலும் ரசிகர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டுள்ளனர்.




அத்துடன், மைதானம் அருகே உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவத்தால், நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உள்ளூர் வைத்தியர் ஒருவர் கூறுகையில்,

“வைத்தியசாலையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சடலங்கள் வரிசையாக உள்ளன. பிணவறையும் நிரம்பியுள்ளது. சுமார் 100 பேர் இறந்துள்ளனர்” என்றார்.

கால்பந்து போட்டியின்போது, ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலால் நூறுக்கும் மேற்பட்டோர் பலியான சம்பவம், அந்நாட்டில் பதற்றமான சூழலை உருவாக்கியுள்ளது.

அமெரிக்கா



அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

அமெரிக்காவில் கடந்த மாதத்தில் இருந்து குளிர்காலம் தொடங்கியுள்ள நிலையில், அங்கு கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, அந்த நாட்டின் மேற்கு மாகாணங்களான வொஷிங்டன், பென்சில்வேனியா ஆகிய பகுதிகளில், வழக்கத்தை விடவும் அதிகமாகக் குளிர் வீசி பனிப்பொழிவு அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்குள்ள பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், பனித்துகள்கள் வீதி மற்றும் ரயில் தண்டவாளங்களை மூடியதால் பொது போக்குவரத்து இரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில், வவொஷிங்டன், ஒகியோ, மிச்சிகன் உள்ளிட்டவற்றில் 61 செ.மீ அளவுக்குப் பனிப்பொழிவு பதிவாகியுள்ளது.

அதிகபட்சமாக, பென்சில்வேனியாவின் வடமேற்கு நகரங்களில் 73 செ.மீ வரை பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதாக, அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சீனா

தாய்வானுக்கு ஆயுத விற்பனை:

## அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை


தாய்வானுக்கு சுதந்திரம் கேட்கும் பிரிவினைவாத சக்திகளைத் தூண்டுவதையும் ஆதரிப்பதையும் அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும் என, சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவில் கடந்த 1949ஆம் ஆண்டில் நடந்த உள்நாட்டுப் போருக்குப் பிறகு தாய்வான் தனி நாடாக உருவானது. ஆனாலும் தாய்வான் தங்கள் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என சீன அதிபர் ஜி ஜின்பிங் தலைமையிலான சீன அரசு கூறி வருகிறது.

அதுமட்டும் இன்றி தேவை ஏற்பட்டால் தாய்வானை கைப்பற்ற, படை பலத்தை பயன்படுத்த தயங்கமாட்டோம் எனவும் சீனா கூறி வருகிறது.

மேலும், தாய்வானின் வான் எல்லைக்குள் அவ்வப்போது சீன போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்து மிரட்டல் விடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

அதேவேளை, தாய்வானுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது. தாய்வானுக்கு அதிக அளவில் அமெரிக்கா ஆயுதங்களை விற்பனை செய்து வருகிறது. சீனா படையெடுக்கும் பட்சத்தில்



தாய்வானை பாதுகாப்போம் என அமெரிக்கா தெரிவித்திருந்தது.

ஆயுத விற்பனையில் அடுத்தகட்டமாக, 385 மில்லியன் டொலர் மதிப்பிலான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. ஆயுத விற்பனைக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை, அண்மையில் ஒப்புதல் அளித்தது. அதன்படி போர் விமானங்கள் மற்றும் ரேடார் அமைப்புகளுக்கான உதிரிப் பாகங்கள் ஆகியவை அடுத்த ஆண்டு முதல் விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடவடிக்கைக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தாய்வானைச் சுற்றி சீனா தனது இராணுவ நடவடிக்கையை அதிகரித்து அச்சுறுத்தி வரும் நிலையில், அமெரிக்காவுடனான தனது இராணுவ உறவுகளை விரிவுபடுத்த தாய்வான் முயன்று வருவது குறிப்பிடத்தக்கது.

மும்பை

## ஷில்பாவின் கணவருக்கு அழைப்பாணை


ஆபாசப் பட வழக்கு விவகாரத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு, நடிகை ஷில்பா ஷெட்டியின் கணவர் ராஜ்குந்த்ராவுக்கு அமுலாக்கத்துறை அழைப்பாணை அனுப்பியுள்ளது.

ஆபாசப் படங்களைத் தயாரித்து விநியோகித்த புகாரில் ராஜ் குந்த்ரா, கடந்த 2021ஆம் ஆண்டில், மும்பை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்

தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ராஜ்குந்த்ரா மறுத்து வரும் நிலையில், 98 கோடி ரூபாய் வரை மோசடி நடந்ததாகவும், பிட்காயின் மோசடிகள் நடந்ததாகவும் அமலாக்கத்துறை தரப்பில், ராஜ்குந்த்ரா மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்த வழக்கு தொடர்பாக கடந்த 29ஆம் திகதி, அமலாக்கத்துறை மும்பையில் உள்ள ராஜ்குந்த்ராவுக்கு சொந்தமான இடங்கள், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்குச் சம்மந்தப்பட்ட இடங்கள் என 15 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர்.

இந்தநிலையில் சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கு தொடர்பான விசாரணைக்கு ஆஜராகுமாறு, ராஜ்குந்த்ரா மற்றும் சம்பந்தப்பட்ட உத்தரப்பிரதேச



தொழிலதிபருக்கு, அமலாக்கத்துறை அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அதில், இந்த வாரத்தில் ஏதாவது ஒருநாள் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# லிவர்பூலிடம் தோற்ற மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக கோடி கக்போ, மொஹமட் சாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது. யுனைட்டெட் சார்பாக் மார்க்கஸ் றஷ்ஃபோர்ட், ஜோஷுவா ஸிர்க்ஸீ ஆகியோர் தலா 2 கோல்களைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற புல்ஹாமுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சமப்படுத்தியது.

முதலாவது போட்டியில்

## சிம்பாப்வேயை வீழ்த்தியது பாகிஸ்தான்

சிம்பாப்வேக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், புலவாயோவில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 165/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தயப் தஹிர் ஆ.இ 39 (25), உஸ்மான் கான் 39 (30), இர்ஃபான் கான் ஆ.இ 27 (15), சைம் அயூப் 24 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: சிகண்டர் ராசா 1/14 [4], வெலிங்டன் மசகட்சா 1/23 [3], ட்ரெவர் குவான்டு 0/14 [2])

சிம்பாப்வே: 108/10 (15.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: சிகண்டர் ராசா 39 (28), தடிவனஷே மருமனி 33 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுஃபியான் முக்கீம் 3/20 [4], அப்ரார் அஹ்மட் 3/28 [3.3], ஹரிஸ் றாஃப் 2/17 [3], அப்பாஸ் அஃப்ரிடி 0/12 [2])

போட்டியின் நாயகன்: தயீப் தஹிர்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.



## ஷாருஜனின் சதத்தோடு ஆப்கானை வென்ற இலங்கை

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷாஜாவில் நடைபெற்று வரும் ஆசிய கிரிக்கெட் சபையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் ஞாயிற்றுக்கிழமை(01) நடைபெற்ற ஆப்கானிஸ்தானுக்கெதிரான குழு பி போட்டியொன்றில் ஷாருஜன் சண்முகநாதனின் சதத்தோடு இலங்கை வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஷாருஜனின் 102, புலிந்து பெரேராவின் 53 ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 244 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், நியூட்டன் ரஞ்சித்குமார் (2),




விரான் சமுதித (2), குகதாஸ் மாதுளன், அணித்தலைவர் விஹாஸ் தெவ்மிக (2), பிரவீன் மனீஷவிடம்(3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 28.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களையே பெற்று 131 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஷாருஜன் தெரிவானார்.

## கட்டார் குரான் பிறீ: வென்ற வெர்ஸ்டப்பன்

கட்டார் குரான் பிறீயில் ஏற்கெனவே இவ்வாண்டு போர்மியுலா வண் சம்பியனானவதை உறுதிப்படுத்திய றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்ற பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் வென்ற நிலையில், பந்தயத்தை ஐந்தாமிடத்திலிருந்து ஆரம்பித்த பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த மக்லரென் அணியின் ஒஸ்கார் பியாஸ்திரி மூன்றாமிடத்தைப் பெற்றார்.




பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் இரண்டாம் நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஜமைக்காவில் சனிக்கிழமை (30) ஆரம்பித்த இப்போட்டியின் இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ் ஷாமர் ஜோசப் (3), ஜேடன் சியல்ஸ்(4), அல்ஸாரி ஜோசப்பிடம்



விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 164 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ஷட்மன் இஸ்லாம் 64, அணித்தலைவர் மெஹிடி ஹஸன் மிராஸ் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள், இரண்டாம் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட் 33 ஓட்டங்களுடனும், கேசி கார்ட்டி 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை நஹிட் ராணா கைப்பற்றினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 03, டிசெம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.